புரட்சிப்
# பெரியார் முழக்கம்
www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM


• திருவள்ளுவர் ஆண்டு 2056 • அக்டோபர், 23 2025 • புரட்சி 25 • முழக்கம் 42 • விலை ரூ.6.00

# ஜீவாவின் பெரியார் மீதான விமர்சனம் சரியா?

**-கொளத்தூர் மணி**

**பொதுவுடைமைக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான மறைந்த தோழர் ஜீவானந்தம் (ஜீவா) ஈரோட்டுப் பாதை சரியா? எனும் தலைப்பில் எழுதியுள்ள நூலில் பெரியார் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகளுக்கு மறுப்பு...**

கோவை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் ஏற்பாடு செய்திருந்த புதிய தோழர்களுக்கான பயிலரங்கின் நிறைவில் 28.9.2025 அன்று மாலை நடந்த 'அய்யம் களைதல்' நிகழ்வில் தோழர் பிரவீன் சுப்ரமணியன் எனும் வரலாற்றுத் துறை ஆய்வு மாணவர் "தோழர் ஜீவா எழுதிய ஈரோட்டுப் பாதை சரியா?" என்ற நூலில் வைத்துள்ள விமர்சனங்களைப் பற்றித் தெளிவுபடுத்துமாறு கோரினார். நான் அந்த நூலினைப் பற்றி நூலின் செய்திகளைப் பற்றி நூல் ஆசிரியரைப் பற்றி முன்வைத்த பல செய்திகள் ஜீவா பற்றாளர்களைக் கடும் கோபத்துக்கு உள்ளாக்கி விட்டது.



ஆவேசமான எதிர்வினைகள் சமூக ஊடகங்களில் கொட்டப்பட்டன. பொழியப்பட்ட வசை மொழிகள் எளிய தோழர்களிடமிருந்து மட்டுமல்ல; முதிர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரிடமிருந்தும் வந்தன.

சீமானோடு ஒப்பிட்டு விட்டீர்களே என்ற சொற்கள் எல்லா பதிவுகளிலும் தவறாமல் காணப்பட்டன. எவர் ஒருவராலும் சகித்துக் கொள்ள முடியாத 'உதாரண புருஷராக' சீமான் திகழ்கிறார் என்ற வெளிப்பாடு மட்டுமே ஏற்றுக்கொள்ளத்தக்கதாய் இருந்தது. மற்றவை அனைத்தும் தோழர் ஜீவா அவர்கள் மீது பதிவர்கள் கொண்டிருந்த அதீத மிகைமதிப்பீட்டை மட்டுமே வெளிப்படுத்துவதாக இருந்தன. எனவே அவற்றை வெளிப்படுத்தவும் தெளிவுபடுத்தவும் மட்டுமே நான் இப்போது எழுத நேரிட்டுள்ளது.

தோழர் யமுனா ராஜேந்திரன் ஒரு கேள்வியை எழுப்புகிறார். தி.க ஏன் ஐந்து பிரிவுகளாக இருக்கிறது என்பதை பொது மேடையில் மணி விளக்குவாரா? என்று "திணறடிக்கும்" ஒரு கேள்வியை எழுப்புகிறார். தாஷ்கண்டில் பொதுவுடைமை கட்சி கட்டப்பட்ட காலத்திலிருந்து "தளர்வு காணாத ஒற்றுமை உணர்வோடு" செயல்பட்டு வருகிறது என்ற நம்பிக்கையுடன் அவர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் நோக்கத்துடன் நான் இதை எழுதவில்லை.

காங்கிரஸ் கட்சிக்குள் இருக்கும் வலதுசாரிகளைத் தோற்கடிக்க வேண்டுமானால் அந்தக் கட்சிக்குள் ஊடுருவியுள்ள சோஷலிஸ்ட்களுடன் மார்க்சியர்கள் இணக்கமாக செயல்பட வேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சி எடுத்த முடிவை எல்லோராலும் புரிந்து கொள்ள முடியாது. அது " வரலாற்றை இயங்கியல் ரீதியாக பார்ப்பவர்களால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்" என்ற மார்க்சிய சொல்லாடல்களுடன் பாடம் எடுக்கும் தோழர்களுக்காக இதை எழுதவில்லை. இந்த தத்துவ சொல்லாடல்கள் இல்லாமல் இதே கருத்தை பெரியார் மக்கள் மொழியில் சொன்னார்.

அதாவது " ஜஸ்டிஸ் கட்சியுடன் விமர்சனத்தோடு இணக்கமாக செயல்படுவது" என்று கூறினார். பார்ப்பன பனியா கட்சியான காங்கிரசுக்கு முற்போக்கு மூலாம் பூசுவது வரலாற்று இயங்கியல் என்றும், பார்ப்பன எதிர்ப்பையும் சமூக நீதியையும் பேசிய நீதிக்கட்சியை விமர்சனத்துடன் ஆதரிப்பது முதலாளித்துவப் பார்வை என்றும் குற்றம் சாட்டும் தோழர்களுக்கு சமாதானம் கூறுவதற்காகவும் நான் இதை எழுதவில்லை.

இந்திய பொதுவுடைமைக் கட்சி குறித்த திறனாய்வும் நமது நோக்கம் அல்ல! அது இன்றைய சூழலுக்கு தேவைப்பட்டதும் அல்ல!


"ஈரோட்டுப் பாதை சரியா? என்ற நூல் குறித்த விமர்சனங்களை மட்டுமே நான் எழுத முற்படுகிறேன். 1948 பிப்ரவரி மாதம் வரை தான் 'ஈவேரா' பெரியார் மீது கொண்டுள்ள விமர்சனங்களை முன்வைத்து அவர் எழுதியுள்ள நூல்தான் 'ஈரோட்டுப் பாதை சரியா?' என்ற நூல். பல்வேறு பதிப்புகளாக தொடர்ந்து அது பதிப்பிக்கப்பட்டு வருகிறது. 2025 ஏப்ரலில் கூட அச்சிடப்பட்டு தொடர்ந்து சுழற்சியில் இருந்து வருகிறது.

அதில் பெரியார் மீது சுமத்தப்பட்ட விமர்சனங்களுக்கும் (பழிசுமத்தல் என்ற சொல்லைக் கூட தவிர்க்கிறேன்). தோழர் ஜீவானந்தம் மீதான மிகைமதிப்பீட்டுக்கும் பதில் அளிப்பதே எனது நோக்கம்.

நூலில் தோழர் ஜீவா எழுதியுள்ளவற்றுள் மாதிரிக்கான சில "நாகரீக" சொற்றொடர்கள் கீழே:

★ ஜஸ்டிஸ் கட்சி உடைய குற்றவாளித்தனத்தை மறைத்தார். பொதுவுடைமை இயக்கமல்ல என்று அரசாங்கத்தை நம்பச் செய்ய வேண்டுமென்று எண்ணுகிற, எழுதுகிற அளவுக்குச் **சாக்கடையில் சறுக்கி விழுந்தார்.** தான் உயிரோடு இருக்க (யாருக்காக?) பிற்போக்குக் கும்பல்களின் யோசனைப்படி **ஈவெரா யார் காலையும் பிடிக்கத் துணிந்தார்."**

★ "சென்னையில் 'நால்வர் சந்திப்பு' நடந்தது (1-8- 1927). அடுத்த வார குடிஅரசில் வெளியான பிராமணியச் சடங்கை விலக்கியவர் பட்டியலில் ஈ.வெ.ரா., திரு.வி.க., டாக்டர் நாயுடு, ஆர்.கே.ஷண்முகம் ஆகிய நால்வரின் பெயர்களும் முன்வரிசையில் இடம் பெற்றன. இவ்வாறு காங்கிரஸ்காரர்களோடு இணைந்து, சமூகச் சீர்திருத்தத்திற்கு ஆதரவு தேடுவதாகக் காட்டி, காங்கிரஸ் ஒழிப்பு வேலைக்கு **மறைமுகமாகப் பணம் திரட்ட முனைந்தார்** ஈ.வெ.ரா."



★ "1935 மார்ச் 10ஆம் நாள் 'குடிஅரசு' மூலம் **மானங்கெட்டத்தனமான** ஒரு அறிக்கையை வெளியிட்டார்."

★ "1942 வாக்கில் **ப.ஜீவானந்தம் நம் ஆள்தான் என்றும்,** கம்யூனிஸ்ட் கட்சிக்கும் தமக்கும் வித்தியாசம் இல்லை என்றும் ..... .... .... **வாலிபர்களைத் திராவிடர் கழகம் வலை வீசிப் பிடிக்க முயன்றது."**

★ "இந்தச் சந்தர்ப்பத்தில் மாகாண சட்டசபை தேர்தல் வந்தது. **என்னைப் போன்றவர்களுக்கும் கூட** ஓட்டுப் போடாமல் நடுநிலை வகித்தனர் திராவிடர் கழகத்தார்."

★ "இங்கிலாந்தில் லான்ஸ்பரி என்ற பிரிட்டிஷ் தொழிலாளர் தலைவர் ஆற்றிய உரைக்கு விடை கூறும் முறையில் ஈவெரா பேச சந்தர்ப்பம் கிடைத்தது. **தோழர் சக்லத்வாலா எழுதிக் கொடுத்த பிரசங்கத்தை ஈவெரா படித்தார்."**

★ **"யார்க்ஷயர் தொழிலாளர்களே!** நீங்கள் இந்தப் போலிக் கட்சிகளையும் கொடிகளையும் நம்பாமல் மனித சுதந்திரத்திற்கும் சமத்துவத்திற்கும் உண்மையாகவே போராடுவதற்காக உலகத்தில் தொழிலாளிகளின் ஒற்றுமையை எதிர்நோக்கிக் கொண்டிருங்கள்... ... .... எனக் கம்யூனிஸ்ட் சக்லத்வாலாவோடு சேர்ந்த போது ஈவெரா **பார்ப்பன ஆதிக்கத்தையும் பனியா சுரண்டலையும் மறந்துவிட்டார்** என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது."

★ "ராஜாஜி இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாக்கினார். வெறும் வாயையே மென்று கொண்டிருந்த கிழவிக்கு ஒரு வாய் அவல் கிடைத்தது. ஈவெரா சந்தர்ப்பத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தார். கட்டாய இந்தியை எதிர்த்த காங்கிரஸ் மந்திரி சபைக்கு ஓரளவுக்குத் தொந்தரவு கொடுக்க முடிந்தது. ..... ...... .... சோஷலிஸ்ட்களாகிய நாங்கள், இந்தி எதிர்ப்பு மேல்பூச்சு, (ராஜாஜியின்) மந்திரி சபை ஒழிப்புதான் உள்நோக்கம் என்பதைக் கண்டதும், **இந்திக் கிளர்ச்சியின் நோக்கத்தை எதிர்த்தோம்."**

"சமூகப் புரட்சியில் தான் சமூக அடிமைத்தனங்கள், **பார்ப்பான் _பார்ப்பனரல்லாதவர்;** உயர்ந்தவன் - தாழ்த்தப்பட்டவன்; **ஆரியன் - திராவிடன்** என்ற கொடுமைகளும் இன்னும் மதத்தின் பெயராலும் கடவுளின் பெயராலும் ஏற்பட்ட கொடுமைகளும் சுரண்டல்களும் **அறவே ஒழியும். சோவியத் யூனியன் இதற்கு எடுத்துக்காட்டு.** சோவியத் வாழ்வில் தான் இனக்கொடுமை, மதக் கொடுமை, பணக்கொடுமை ஆகிவை ஒழிந்திருக்கின்றன."

இவ்வாறான 'பொன்மொழிகள்' இன்னும் ஏராளம் உள்ளன. தொடர்ந்து அவற்றை ஒவ்வொன்றாக எடுத்து விளக்குவோம்.

நூல் முழுவதும் 'ஈவெரா, ஈவெரா' என்ற சுட்டலை மட்டும்தான் காணமுடியும். பின் ஏன் இதே மொழியில் பேசும் எச்.ராஜாவோடு பொருத்தாமல் சீமானோடு பொருத்தினீர்கள் என்ற புதிய குற்றச்சாட்டை "தோழர்கள்" புதிதாக எழுப்பவேண்டாம் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**தொடரும்.**

தலையங்கம்

# அரசியல் ஊழலும் ஆன்மீக ஊழலும்

திருப்பதி ஏழுமலையான், சபரிமலை அய்யப்பன், குருவாயூர் கிருஷ்ணன் என்ற பிரபலமான கோயில்களின் ஊழல் மோசடிகள் வெளிவந்து கொண்டு இருக்கின்றன. திருப்பதியில் பக்தர்கள் காணிக்கையான உண்டியல் பணத்தில் ரூ.100 கோடி திருடப்பட்டுள்ளது. நிர்வாக அதிகாரிகள், தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இணைந்து திருடியப் பணத்தில் பங்கு போட்டு இருக்கிறார்கள். திருடியவர் கைது செய்யப்பட்டு இருக்கிறார். பங்குச் சந்தையிலும், வீடு, மனைகள் வாங்கிக் குவிப்பதிலும் ஏழுமலையான் காணிக்கை பயன்படுத்தப்பட்டுள்ளது. இது தவிர நெய், லட்டு பிரசாதம், தரிசன டிக்கெட் ஊழல்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. உயர்நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு ஏற்றுள்ளது.

இதே போல் சபரிமலை கோயிலின் கருவறை வாயிலில் உள்ள துவாரக பாலர் சிலைகளுக்கு அணிவிக்கப்பட்டிருந்த கவசங்களில் பூசப்பட்டிருந்த தங்கம் திருடப்பட்டுள்ளது. இந்த தங்கக் கவசத்தை பழுது நீக்கி செப்பனிட்டு தரும் வேலை ஒரு தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டது. இரண்டு முறை சீரமைத்து ஒப்படைத்துள்ளார். இந்த சீரமைப்பின் போது 4.5 கிலோ தங்கம் திருடப்பட்டது கண்டறியப்பட்டு, இப்போது நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. தங்கத்தை மறைத்து செப்பு தகடு என்று பதிவு செய்துள்ளார்கள். நீதிமன்றத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்ற விதிகளையும் மீறி இந்த மோசடி நடந்துள்ளது.

கேரளாவில் உள்ள குருவாயூர் கிருஷ்ணன் கோவில் தங்கம், வெள்ளி மற்றும் விலை மதிப்புள்ள சொத்துக்கள் காணாமல் போய் இருப்பது இப்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. 2019 லிருந்து 2021 வரை யானை தந்தங்கள், தங்க நகைகள் காணாமல் போய் இருப்பதை தணிக்கைத் துறை கண்டறிந்து அறிக்கையாக வெளியிட்டுள்ளது.

கடவுளுக்குக் காணிக்கையாக்கப்பட்ட உடைமைகளைத் திருடுகிறவர்கள் தீவிரமான கடவுள் நம்பிக்கையாளர்களாக தங்களைக் காட்டிக் கொள்கிறார்கள். ஆனால் கடவுள் தண்டிப்பார் என்ற அச்சமே இவர்களுக்கு கிடையாது. இவர்களின் நம்பிக்கை உண்மையாக இருந்தால் இந்த குற்றங்களை அவர்கள் ஒருபோதும் செய்திருக்க மாட்டார்கள். காணிக்கை என்பதே ஊழல் தான்; கடவுளுக்கான லஞ்சம். கருப்புப் பணம் தான் பெருந்தொகையாக உண்டியலில் போடப்படுகிறது.

அரசியல் ஊழல்கள் மட்டும் இங்கே அனல் கக்கிக் கொண்டிருக்கிறது. ஊழலற்ற ஆட்சி என்று முழங்குகிறார்கள், ஆனால் பக்தியின் பெயரால், ஆன்மிகத்தின் பெயரால், கோயிலின் பெயரால் நடக்கும் ஊழல்களைப் பேச எவருமே முன்வருவதில்லை.

அரசியலில் நடமாடும் ஊழல் பணம் முடங்கிக் கிடப்பது இல்லை. அது பல்வேறு வடிவங்களில் சமூகத்தில் புழங்குகிறது. ஆனால் கோயில்களில் பல லட்சம் கோடி சொத்துக்கள் முடங்கிப் போய் கிடக்கின்றன, அசைவின்றி தேங்கி இருக்கிறது. கல்வி, மருத்துவம் போன்ற மக்கள் சேவைகளுக்குக் கூட கோயில் நிதியை பயன்படுத்தக்கூடாது என்று சங் பரிவாரங்கள், பார்ப்பனர்கள் எதிர்க்கிறார்கள். நீதிமன்றங்களும் கோயில்களின் சடங்குகளுக்கு மட்டுமே நிதியைப் பயன்படுத்த வேண்டும் என்று தீர்ப்பு எழுதுகின்றன. இந்த சொத்துக்கள் ரிசர்வ் வங்கியில் மூலதனமாக்கப்பட்டால் நாட்டில் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ளும் வாய்ப்புகள் உண்டு. ஆனால் எந்த ஒரு அரசியல் கட்சியும் இதை பேசத் தயாராக இல்லை.

கோயில்கள் பார்ப்பன அதிகாரத்தின் அடையாளச் சின்னங்களாகவே நீடிக்க வேண்டும் என்று பார்ப்பனர்கள் உறுதி காட்டுகிறார்கள். கோயிலும், கடவுள் சிலைகளும், கோயில் விழாக்களும், பண்டிகைகளும் பார்ப்பனர்களுக்கு சமூக மூலதனம். இந்த மூலதனத்துக்கு வலிமை சேர்கின்றபோது பார்ப்பன சமுதாய ஆதிக்கமும் வலிமை அடைந்து வருகிறது. பார்ப்பனர்களின் வேத மதத்தில் கோயிலோ, உருவ வழிபாடோ கிடையாது. வேத காலத்தில் பின்பற்றி வந்த அக்னி, வருணன், இந்திரன் போன்ற கடவுள்களை அவர்களே ஒதுக்கிவிட்டு, இப்போது உருவ வழிபாட்டுக்கு வந்து விட்டார்கள். கோயில்கள் தோன்றிய காலத்தில் இருந்த நிலையிலிருந்து இப்போது நவீனத்துக்கு ஏற்ப கோயில்களில் மாற்றங்கள் வந்துவிட்டன. ஆனாலும் கோயில் பழமைவாதங்களில் தளர்ச்சி ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் பார்ப்பனர்கள் உறுதியாக இருக்கிறார்கள்.

கடவுள் நம்பிக்கையிலும் மாற்றங்கள் வந்துள்ளன. ‘கடவுள் நம்மை வழி நடத்துவார்; தவறுகளை தண்டிப்பார்’ என்ற நம்பிக்கைகள் மக்களிடம் குறைந்து வருவதை உணர்ந்து கொண்ட பார்ப்பனர்கள், மதத்தை அரசியலாக்கி விட்டனர். இந்து என்ற ‘நம்பிக்கைத் தளத்தில் இருந்து பிற மத எதிர்ப்பு’ என்ற போர்வையில் இந்து மதத்தைக் காப்பாற்றும் செயல் திட்டங்களை உருவாக்கி விட்டனர். புராணக் கதைகளால் கட்டமைக்கப்பட்ட பண்டிகைகளை உயிர்த்துடிப்போடு நீடிக்க அதன் உள்ளடக்கத்திலும் பார்ப்பனர்கள் சமரசம் செய்து கொண்டுள்ளார்கள். தேவர்களையும் வேதங்களையும் எதிர்த்தால் மரண தண்டனை என்ற மனநிலையை உருவாக்குவதற்காக பண்டிகைகள் பார்ப்பனர்களால் உருவாக்கப்பட்டன. இப்போது அது மறைக்கப்பட்டு வணிக மயமாக்கப்பட்டு மக்களின் கொண்டாட்டமாக மாற்றப்பட்டுவிட்டது. ஆனால் இந்து மத உணர்வு மட்டும் அப்படியே நீடித்துக் கொண்டிருக்கிறது.

உலமயமாக்கல் என்ற கொள்கை வந்த பிறகு பெரும் தொழில் நிறுவனங்களுக்கும் மதத்துக்குமான உறவுகளை பார்ப்பனர்கள் தகவமைத்துக் கொண்டு விட்டார்கள். அரசு, மத நிறுவனம், வணிகம் பெரு வணிக குழுமங்களுடன் இந்து மதத்தையும் இணைத்து விட்டது பார்ப்பனியம்.

ஆக காலத்தின் மாற்றத்திற்கு ஏற்ப பார்ப்பனியம் தன்னை தகவமைத்துக் கொண்டு வருகிறது. கோயில், பக்தி என்ற பெயரில் நடக்கும் ஊழல்களோ, மோசடிகளோ பெருமளவில் எதிர்க்கப்படுவதில்லை. “நம்பிக்கை” “புண்படுத்துதல்” என்ற போர்வையால் அது மூடி மறைக்கப்படுகிறது. கடவுள் சக்தி இதில் காணாமல் போய்விட்டது என்ற உண்மையும் மறைக்கப்படுகிறது. அரசியல் ஊழல் பற்றி பேசுகிறவர்கள் சமூகத்திற்கு பெரும் கேடுகளை உருவாக்கும் இந்த பார்ப்பனிய கோயில் ஊழலை மட்டும் பேச முன்வராதது ஏன்?

# ஆணவப் படுகொலை; சில வரலாற்றுத் தகவல்கள்

***தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆணவப் படுகொலை தடுப்புச் சட்டம் குறித்து ஆராய ஓய்வு பெற்ற நீதிபதி கே.என் பாஷா தலைமையில் ஒரு குழுவை நியமித்துள்ளார். ஆணவப் படுகொலைகள் குறித்து பல வரலாற்றுத் தகவல்களை தருகிறது இக்கட்டுரை...***

*தீண்டாமைக் குற்றச் சட்டம் (**Untouchability offences act, 1955**) என்னும் சட்டம்தான் தற்போதைய வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்துக்கான முன்னோடி. முந்தைய சட்டத்தின் போதாமைகளால் உருவானதுதான் பட்டியல் ஜாதியினருக்கு எதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டம். இளையபெருமாள் ஆணையத்தை அடிப்படையாகக் கொண்டு, இச்சட்டம் கொண்டுவரப்பட்டது. ஒரு படுகொலை ஆணவப் படுகொலையா இல்லையா என்பதை வேறுபடுத்தி, அதற்கான நடைமுறைகளை மேற்கொள்ளத் தனிச்சட்டம் தேவையாக இருக்கிறது. இத்தகைய தனிச்சட்டங்கள் குறித்து நீதிமன்றங்களின் பார்வையை கணக்கில் கொண்டால் இதைச் சரியாகப் புரிந்துகொள்ளலாம்.*

*உச்ச நீதிமன்றம் ஆணவக் கொலைகளுக்கான தனிச்சட்டம் வேண்டும் என்பதை வலியுறுத்திக் கொண்டேதான் இருந்திருக்கிறது. நீதிபதி மார்க்கண்டேய கட்ஜு அளித்த மூன்று வழக்குகளின் தீர்ப்புகளில் இவை வலியுறுத்தப்பட்டுள்ளதைக் குறிப்பிட்டாக வேண்டும். உ.பி லதா சிங் வழக்கு', 'டெல்லி -பசுவான் தாஸ் வழக்கு', தமிழ்நாட்டில் 'ஆறுமுக சேர்வை வழக்கு' ஆகிய மூன்று வழக்குகளையும் ஆணவக் கொலை வழக்குகளாக கருதியே இந்த தீர்ப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.*

*பெற்றோருக்குத் தங்கள் பிள்ளைகளின் ஜாதி மறுப்புத் திருமணத்தில் விருப்பமில்லை எனில், அவர்களால் அதிகபட்சம் தங்கள் மகன் அல்லது மகளுடனான சமூக உறவுகளைத் துண்டித்துக் கொள்ள முடியுமே தவிர, அவர்களை மிரட்டவோ, வன்முறைச் செயல்களைச் செய்யவோ, தூண்டவோ எவ்வித அதிகாரமும் இல்லை என்று அழுத்தந்திருத்தமாக லதாசிங் வழக்கின் நீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.*

*பகவான் தாஸ் வழக்கில்தான் ஆணவக் கொலையை 'அரிதிலும் அரிதான வழக்காக' கருதி, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அந்த தூக்குத் தண்டனைத் தீர்ப்பின் கடைசி வரிதான், ஜாதிச் சங்கங்களுக்கும் அடக்கி ஒடுக்க நினைக்கும் ஆதிக்கச் சக்திகளுக்கான எச்சரிக்கை மணியாக ஒலித்தது. 'ஆணவக் கொலைகளை செய்யத் துணியும், திட்டமிடும் எந்த ஒரு மனிதரும் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவெனில் உங்களுக்கு தூக்கு மேடை காத்திருக்கிறது" என்பதுதான் அந்த வரி.*

*பகவான் வழக்குக்குப் பிறகு ஆறுமுக சேர்வை வழக்கிலும், காவல் துறைக்கான அறிவுறுத்தல்களைக் கொடுத்திருக்கிறது உச்ச நீதிமன்றம். இந்த வழிகாட்டல்களை அடிப்படையாக வைத்துத்தான், ஜாதி மறுப்புத் திருமணங்களைப் பிரித்துவைக்கும் 'காப்' போன்ற பஞ்சாயத்துகளுக்கு எதிரான நடைமுறைகளைப் பற்றி சட்ட ஆணையத்திடம் நாடாளுமன்றம் பரிந்துரைகளைக் கேட்டது. இந்தியச் சட்ட ஆணையம் தனது அறிக்கை எண் 242-இல் நாம் பேசிக்கொண்டிருக்கும் தனிச்சட்ட முறைகளுக்கான வரைவை அப்போதே அளித்துவிட்டது. சட்ட ஆணையத்தால், 2012-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட 'சட்டவிரோதத் தலையிடுதல் (திருமணச் சுதந்திரத்தில் தலையிடுதல்) தடுப்புச் சட்டம்' இன்றுவரை சட்டம் ஆக்கப்படாமல் கிடப்பில் இருக்கிறது. நீதியரசர் பி.வி.ரெட்டி தலைமையிலான ஆணையம், தற்போதைய சட்டங்களில் போதாமைகள் இருப்பதாகவும், இத்தகைய தனிச்சட்டம் நிச்சயம் நிறைவேற்றப்பட வேண்டியது அவசியம் என்றும் தெரிவிக்கிறது. எந்த அரசாக இருந்தாலும், ஜாதி வாக்குவங்கிகளுக்காக இந்தச் சட்டத்தை நிறைவேற்றத் தயங்குவதும், தவறுவதும் சாபமாக இருக்கிறது. என்பதுதான் செயல்பாட்டாளர்களின் கூட்டு வேதனைக் குரல்.*

*இந்நிலையில் 2016-இல் சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதியரசர் ராமசுப்ரமணியம் அளித்த தீர்ப்பில், ஆணவக்கொலை அல்லது ஆணவக் கொலை முயற்சிகள் பதிவாகும் பட்சத்தில், காவல்துறை எப்படிச் செயல்பட வேண்டும், ஆணவக் கொலையைத் தடுக்கும் வழிமுறைகளையும், கட்டமைப்பையும் கொடுத்திருக்கிறார். அதேபோலத் தமிழ்நாட்டில் ஆணவக் கொலைகள் நடைபெறுவதில்லை என்னும் ஆட்சியாளர்களின் கூற்றைப் பொய்யாக்கும்படி 47 ஆணவக் கொலைகளைத் தேதிவாரியாகத் தனது தீர்ப்பில் பட்டியலிட்டுக் காட்டினார்.*

*உச்சநீதிமன்றமும் ஆணவக் கொலைகளைத் தடுப்பதற்கான, ஆணவக் ஆணவக் கொலைகளைக் கையாள்வதற்கான தனிச்சட்டத்தை இயற்றுமாறு நாடாளுமன்றத்திடம் அறிவுறுத்தியிருக்கிறது. தனிச்சட்டம் இயற்றப்படும் வரை, பிரபல வழக்கான சக்தி வாஹினி வழக்கில் நாடாளுமன்றத்திடம் உச்ச நீதிமன்றம் முன்வைத்த சட்டப் பரிந்துரையில் ஆணவக்கொலைக்கு எதிரான தனிச்சட்டம் இயற்ற வேண்டும் எனவும், சட்டம் இயற்றும் வரைக்குமான வரையறுத்திருக்கிறது. வழிகாட்டல்களையும் மிகத் தீர்ப்பில் இந்தத் தெளிவாக சொல்லப்பட்டுள்ள தடுப்பு- தண்டனை நடவடிக்கைகளைச் செயல்படுத்துமாறு 31.05.2018 அன்று மாநில அரசுகளின் தலைமைச் செயலாளர்களுக்கு மத்திய உள்துறை (F.No. 24013/78/2010-SC/ST-W Dt. 31.05.2018) அனுப்பியது. இருந்தபோதும் எந்த மாநில அரசும் இத்திர்ப்பைச் செயல்படுத்த முன்வரவில்லை.*

*ஒரு சட்டத்தின் வெற்றி, அச்சட்டத்தின் நடைமுறைப்படுத்தலிலேயே உள்ளது. காவல் துறையினரின் வெற்றிகரமான செயல்பாடுகள்தான் இதில் மிகவும் முக்கியம். காவல் துறையினருக்கான விழிப்புணர்வையும் சமத்துவ உணர்வூட்டப் பயிற்சிகளையும் தருவது. ஆணவக் கொலைகள் நடந்த பின்னர் நீதி கேட்பதைவிடவும் அவற்றைத் தடுப்பதில் அரசின் கவனம் செல்ல வேண்டும். அதற்கு இச்சட்டம் வெறும் தண்டனைச் சட்டமாக (Punitive Law) மட்டுமில்லாமல், தடுப்புச் சட்டமாக (Preventive Law) இருப்பது அவசியம். வன்கொடுமைத் தடுப்புச் சட்டமே ஒரு தடுப்புச் சட்டமாக அல்லாமல் குற்றும் நடந்த பின் செயல்படும் தண்டனைச் சட்டமாகவே உள்ளது. இது அச்சட்டத்தின் நோக்கங்களுக்கே எதிரானது. தடுப்புச் சட்டமாக செயல்படுவதில் மாநில-மாவட்ட வாரியான விழிப்புணர்வுக் குழுக்கள், கண்காணிப்புக் குழுக்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் முக்கியப் பங்கு வகிக்கும். வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக செயல்படுத்த முடியாததற்கு முக்கியக் காரணம் இக்குழுக்களின் செயலற்றதன்மையே. எனவே, இதனையும் களைய வேண்டியது அவசியம்.*

*தற்போது இருக்கும் தண்டனைச் சட்டத்தில், ஆணவக் கொலையை ஒரு படுகொலை என்று கருதி, கொலையாளிக்கும் அதற்கு உடந்தையாக இருந்தவருக்கும் மட்டும் தண்டனைகள் கிடைக்கும். ஆனால், சிறப்புச் சட்டத்தில் அக்குற்றத்தை ஆதரிப்பவர்கள், ஜாதி வெறியைத் தூண்டும் வகையில் செயல்பட்டவர்கள் என அனைவரையும் சட்டத்தின் பிடிக்குள் கொண்டுவரலாம். வழக்கு விசாரணை வேமாக நடைபெறும் வண்ணம் சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்க வேண்டும். எனவே தனிச் சட்டம் இயற்றப்படுமாயின் அது ஆணவக் கொலைகளுக்கான தண்டனைச் சட்டமாக மட்டுமல்லாமல், ஆணவக் கொலைத் தடுப்புச் சட்டமாகவும் ஜாதிமறுப்பு, மத மறுப்புத் திருமணத்தில் இணைந்த, இணைய விரும்பும் இணையர்களைப் பாதுகாக்கும் காப்புச் சட்டமாகவும் இயற்றப்பட வேண்டும். இதுதான் இந்தப் பிரச்சினைக்கு விரைவான தீர்வை வழங்கும்.*

*இந்தியா அரசமைப்புச் சட்டக் கூறு 17 தீண்டாமையைத் தடை செய்கிறது. சட்டக் கூறு 15 மதம் ஜாதி பாலினம் ஆகியவற்றின் மூலம் வேறுபாடு காட்டக் கூடாது என்கிறது. சட்டக் கூறு 14 சமத்துவத்தை வலியுறுத்துகிறது ஆனால் இவை இன்று வரை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. ஜாதிய மனநிலைக்கு எதிரான அழுத்தமான செயல்பாடுகளுடன் அரசு அனைவருக்குமானது என இன்னும் நம்பிக்கொண்டிருக்கும் கடைக்குட்டி விளிம்பு நிலை மனிதர்களை நம்பிக்கையை காக்க வேண்டியது ஆள்பவர்களின் பொறுப்பு.*


*ராகுல் சிவசுப்ரமணியம்*
***(ஆய்வு மாணவர், புதுவை பல்கைக்கழகம்)***
***இந்து தமிழ் திசை, ஆக-12,2025***

# அண்ணாவின் ‘கடவுள் – புராண’ எதிர்ப்பு!

## கொளத்தூர் நாத்திகர் விழா சிந்தனை-20

கரிமுகத்தோடு ஒரு கடவுள், நாக்கிலே நாயகியுடன் ஒரு கடவுள், நடனமாடும் மயில் மீது மற்றோர் கடவுள், அலைகடல் மீது ஆலிலைமேல் துயிலும் வேறோர் கடவுள், தலைமீது தையலுடன் பிறிதோர் தேவன், என்ற இன்னோரன்ன கடவுள்கள் இருந்து கொண்டு இன்னின்னவருக்கு இன்னின்ன விதமான நிலைமை இருக்க வேண்டும் என்று ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வாழ்கிறார்கள் என்பதை இன்றும் நம்பி, அந்த நம்பிக்கைக்கேற்ற நாள் நட்சத்திரம் நடவடிக்கைகளிலே பாசம் வைத்துக் கொண்டுள்ள மக்களிடத்திலே, கான்ஸ்ட்டிடியூவண்ட் அசெம்பிளி பற்றியும், காரல் மார்க்சின் கருத்துப் பற்றியும், புரட்சி பற்றியும் பேசுகிறார்களே!

திருந்தாத வயலிலே தீங்கனிமரம் கோரி, விதை தூவி, தேன் பெய்தாலும் பயன் கிட்டுமா? ஆடை அணி புனைந்து, ஆடிப் பாடி வரச்செய்தாலும், அலியை (திருநங்கையை) அணைத்துக் கொண்டால் சுகம் கிட்டுமா? ஆரியம் எனும் படுகுழி மீது புராணமென்னும் பச்சிலைபோட்டு மூடிக் கிடக்கிறது. பச்சையைக் கண்டு இச்சை பட்டுச் செல்லும் பாமரர் நிச்சயமாகப் படுகுழி வீழ்வர் என்பது ஆரியருக்குத் தெரியும்! கொக்கெனக் காத்திருந்து, குள்ளநரி போல் குறியை வஞ்சகத்திலேய நிறுத்தி, கள்ளமும் கபடமும் இல்லாதவரைக் கைதிகளாக்கி விட்டனர்; அவர்களின் கண்ணீர் வெள்ளத்தைக் கொண்டு, தமது சுயநலத்தோப்புக்கு நீர் பாய்ச்சு கின்றனர்; அவர்களின் வியர்வை, இரத்தம் ஆரியப்பண்ணைக்குப் பாய்கிறது. இதனை அறிந்தோறும், அஞ்சுகின்றனர் எடுத் துரைக்க எனில், அறியாதார் நிலைபற்றிக் கூறிடவும் வேண்டுமா?



அறிஞர் அண்ணா கடவுள் மத மறுப்பாளர். கடவுள்,மதம், புராண எதிர்ப்பு கட்டுரைகளை ஏராளமாக எழுதியுள்ளார். திமுக என்ற அரசியல் கட்சியான பிறகு ‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’ என்ற கருத்தை சொர்க்கவாசல் என்ற திரைப்படத்தின் வழியாக முன்வைத்தார். இது திமுகவின் அதிகாரபூர்வமான கொள்கை அல்ல! 1945 –ல் அண்ணா எழுதிய கடவுள், மத எதிர்ப்பு கட்டுரை..

அறிவிலே அக்கரை, நாணயத்திலே நாட்டம், நீதியிலே நோக்கம், மனிதத் தன்மையிலே நம்பிக்கை இம்மி அளவேனும் இருப்பின், ஆண்டவன் பெயரால் அளக்கப்பட்டுள்ள ஆபாசங்களை மக்களிடை எடுத்து விளக்கி அன்னியத் துணிகளை நெருப்பிலிடுவதற்கு நெடுநாட்களுக்கு முன்பே, இந்தக் குப்பை களைக் கொளுத்திவிட்டிருக்க மாட்டார்களா? கள்ளுக் கடை பகிஷ்காரத்திற்கு முன்னரேயே கடவுள் பெயரைக் கூறிக் காசைப் பறிக்கும் ஸ்தாபனங்களின் முன் மறியல்கள் நடத்தியிருக்க மாட்டார்களா?

– – – – – – – – – – – – – – – – – – – – – – – – –

கடவுளைப் பற்றிக் கசிந்து கண்ணீர் மல்கிப் பலர் கூறுவர் இதுபோல. ஆம்! நெறி ஒளி, நீதி, வாய்மை, தூய்மை, அன்பு -இவையே கடவுள். அறிவான தெய்வமே! எங்கும் நிறைகின்ற பொருளே! அன்பே சிவம்! உண்மையே ஆண்டவன் பலர் போதித்தனர். – என்று

இவை இருக்கும் இதே இடத்திலே, கடவுட் கதைகள் வேறு உண்டு! தத்துவம் ஒருபுறம், தத்தித்தோம் எனத் தாண்டவமாடும் தர்ப்பா சூரரின் தந்திரக் கதைகள் பக்கத்திலே! இவையும் சரி, அவையும் சரியே என்று கொண்டு, "இடது காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமே" என்பதற்குத் தத்துவம் இதுவென்பதையும் கேட்டுக் கொண்டு, இடதுகாலை இன்னவர் இந்தநாள் இந்த மடத்திலே இவ்வளவு சொகுசாகத் தூக்கி நின்றாடும் காலை, இன்ன மடாதிபதி இத்தனை பெரிய தொந்தி, இப்படிக் குலுங்க நகைத்து, இமைகொட்டாது பார்த்து, இன்னின்ன பரிசுகள் தந்தார் என்ற இந்த நடவடிக்கையும் கண்டு தத்துவத்திற்கும் நடத்தைக்கும் உள்ள தகாத தன்மையைக் கண்டு தணலிடு ’புழுவெனத் துடிக்காது கிணற்றுத் தவளை போல் இருந்து விடுகின்றனர் – மக்கள் – மக்களின் தலைவர்களிலே பலர்!

உங்கள் கடவுள் இப்படி இருப்பார் என்று விநாயக உருவத்தைக் காட்டும்போது, அந்த வைதிகன் கன்னத்திலே பகுத்தறிவாளனின் கரம் விளையாடும் காலம் விரைவிலே வரும் என்பது என் துணிபு. உன் கடவுளின் வரலாறு இது. அவருடைய குணாதிசயம் இன்னவை என்று, இன்றுள்ள புராணாதிகளைக் கூறினால் வேறுவிதியற்றவர்கள் கேட்டுக் கொள்வர். சொந்த மதியற்றவர்கள் பொறுத்துக் கொள்வர். சிந்தனா சக்தி உள்ள வர்கள் கேட்டுக் கொள்வார்களா? எனக்குத் தூய்மையான ஆண்டவன் வேண்டும். தீயன் வேண்டாம் என்று தீர்ப்புக் கூறும் காலம் வெகுதூரத்தில் இல்லை. கொஞ்சம் தெளிவு, சற்று சொரணை, நாடியிலே இன்னமும் கொஞ்சம் முறுக்கு, மனத்திலே சற்று அதிகரித்த கவலை, அறிவிலே அக்கறை பிறக்க வேண்டும்.

பயபக்தியுடன் நீங்கள் கும்பிட்டு வணங்கும் விநாயகர் யார்? மூவருள் முதல்வர் என்று சைவர்கள் மார் தட்டிக் கூறிக் கொள்ளும் முக்கண்ணனாரின் மைந்தன்! கடவுள் என்றாலே எல்லாவற்றையும் கடந்தவர் என்று பொருள். ஆனால் இங்கோ கடவுளுக்குக் குடும்பம். பிள்ளைக் குட்டி, பரத்தை முதலிய எந்தப் பாசமும் இல்லாமலில்லை.

அத்தகைய சிவனாரும், உமையம்மையும் ஒருநாள் காட்டு மார்க்கமாக உலாவிக் கொண்டிருந்தனராம் – கடலோரத்திலேஇப்போது காதலர்கள் எதிரே திரை கடலும், இதயத்திலே களிப்புக் கடலும், கடலிலே அலையும், மனதிலே கருத்தும் கொந்தளிக்க நடந்து செல்வது போல! எல்லாவற்றையும் கடந்தவர், அங்கு இரு யானைகள் கலவி செய்திடக் கண்டாராம்! கண்டதும் அவர் மனதிலே அலைமோதத் தொடங்கியது. மன்மதனைக் கண்ணால் எரித்தார் எங்கள் மகாதேவர் என்று பெருமையுடன் கூறிக் கொள்ளும் சைவர்கள், இந்தப் புராணத் தையும் பூரிப்போடும் பேசுவர். இதைக் கூறியும் நீறு பூசுவர்! காட்டானைகளின் கலவியைக் கண்டதும் காமனைக் கருக்கிய வருக்கு உள்ளத்திலே காம உணர்ச்சி ஓங்காரமாகி விட்டது! ஆம்! கடவுளுக்குத் தான் தோழரே இந்த உணர்ச்சி வந்தது! தாங்களும் காட்டானைகளாகிக் கலவி இன்பத்தைக் கண்டு காமரசத்தை உண்டுகளிக்க எண்ணினார். உமையும் சரி என்றார். இருவரும் யானை உருக் கொண்டனர். காட்டிலே திருவிளை யாடல் நடந்தது? அந்தப் போகப் பிரசாதமே யானைமுகக் கணவதி! பிள்ளையார் பிறப்புக்கு இஃதோர் வரலாறு.

இதன் ஆபாசத்தைப் பாரீர்; இத்தகைய ஆபாசத்தை ஆண்டவன் செயலென்று கூறிடும் அன்பர்களைவிட, கடவுளை நிந்திக்கும் கயவர் உண்டோ கூறீர். கருணா மூர்த்தி, கட்டுகளைக் கடந்தவர், மும்மலமற்றவர். பஞ்சேந்திரியங்களின் சேட்டைகள் பரமனை அணுகா என்று பேசுவதும், பின்னர் கண்ணுதற் கடவுள் காட்டானைகள் கலவி செய்யக் கண்டு காமங் கொண்டு, கணபதியைப் பெற்றார் என்பதை உரைப்பதும் பேதைமை யன்றோ, பித்தமன்றோ, என்று கேட்க உனக்கு உரிமை கிடையாதா?

மற்றுமோர் வரலாறு கேளீர்! பார்வதி குளிக்கச் செல்கையில், தன் உடம்பிலிருந்த அழுக்கை உருட்டித் திரட்டி ஒரு பிள்ளையை உற்பத்தி செய்து, தன் வீட்டு வாயிலைக் காவல் புரியவைத்தாராம். பத்துமாதம் சுமந்து பாமரர் பெற்றால், பார்வதியார் உடல் அழுக்கை உருட்டிப் பிள்ளையாக்குகிறார்! கடவுள் அல்லவா! இதுகூடச் செய்யாவிட்டால், இமையவனை மணந்தவளுக்கு இழுக்கு நேரிடும் என்று புராணப் புளுகர்கள் கருதினர் போலும்!

அழுக்கன், பார்வதியின் வீட்டு வாசலிலே நிற்கையில், பரமசிவனார் உள்ளே நுழைய வந்தாராம். அவருக்கு என்ன அவசரமோ பாவம். தனயன் தந்தையைத் தடுக்க, தந்தை கோபித்து வாள் கொண்டு பிள்ளையின் தலையை வீசிவிட்டுஉள்ளே நுழைந்தார். மகனின் கழுத்து பனங்காய் போலும்! ஒரே வெட்டு மகன் தலை உருண்டது!

கருணாமூர்த்தியின் காரியத்தைப் பாரீர்! மகன், மாதா நீராடுகிறாள் சற்றுப் பொறும் என்று கூறியதைக் கேட்டுக் கோபம் பொங்கிக் கொடுவாள் கொண்டு சிரச்சேதம் செய்கிறார் சிவனார். எவ்வளவு நீதி, எத்தகைய நாகரிகம். விஷயமறிந்த பார்வதி, "ஐயோ மகனே! அழுக்கனே, பாலகா?" என்று அலறி அழ, அரன் கண்டு, செத்தால் என்ன, இதோ பிழைக்க வைக்கிறேன் என்று தேற்றி வெளியே வந்து பார்க்க உடல் மட்டும் இருந்ததாம். தலையைக் காணோமாம்! செத்தவனை மீட்கும் சக்தி பெற்ற சிவனாருக்கு மறைந்த தலையைக் கண்டு பிடிக்க முடியாதுபோன காரணம் என்னவோ, வழியே ஒரு யானை சென்றதாம். அதன் தலையை வெட்டி உருண்டு கிடந்த உடலிலே ஒட்ட வைத்து பிள்ளையாரைப் பிழைக்கச் செய்ய, யானை முகத்தோடு கணபதி எழுந்தாராம்.

இந்த வரலாற்று மூலமாகவாவது ஏதேனும் கடவுள் தன்மை, கடவுட் கொள்கை, மனிதத் தன்மை, தூய்மை முதலிய நற்குணம் விளங்குகின்றனவா என்று நாத்திகமென்றால் நடுங்கும் நமது ஆத்தீக அன்பர்களைக் கேட்கிறேன்.

மற்றுமோர் வரலாறு! நமது புராண இலட்சணம் எப்படி யெனில், ஒரு நிகழ்ச்சிக்குக் குறைந்தது ஒன்பது விதமான கதை யாவது இருக்கும். புளுகர்கள் கூட்டம், போட்டியிட்டுக் கொண்டு வேலை செய்துள்ளது. விநாயகர், பார்வதியின் கர்ப்பத்திலே இருக்கையிலே ஒரு அசுரன், காற்றுவடிவில் கருவிருக்கும் இடஞ்சென்று, குழந்தையின் தலையைக் கொய்து விட உடனே பரமன், அந்தத் தலை போனாலென்ன இதோ ஆனைத்தலை இருக்க அருள்கிறேன் என்று பலித்திட, ஆனை முகத்தோடு குழந்தை பிறந்தது என்று விநாயக புராணம் கூறுகிறது. தக்கன் யாகத்தை அழிக்க சிவனாரால் ஏவப்பட்ட விநாயகர், சிரம் அறுபட்டு விழ, சிவனார் சிரமற்ற பிள்ளையைக் கண்டு, யானைச் சிரமொன்றை வைத்துப் பிள்ளையை உயிர்ப்பித் தாராம்; உயிர் வரச்செய்யும் உத்தமர், பழைய மனிதத் தலையை மட்டும் வரவழைக்க அறியார் போலும் என்ன மடமை!

யாக்ஞவல்கியர் காலத்துக்கு முன்பு, விநாயகர், ஆரியருக்குக் கிடையாதென்றும் பின்பு நான்கு விநாயகர்கள் தோன்றினரென்றும், அவர்கள் நாசஞ்செய்யும் கெட்ட குணங் கொண்டோரென்றும், இரத்தச் சோறும் இறைச்சிப் பலியும் வேண்டினரென்றும், பிறகு நான்கு விநாயகர் போய் ஒரு மஹாகணபதியாக்கப்பட்டதாகவும், இந்து மார்க்க தத்துவ விளக்கமுரைக்கும் பாபு பகவான் தாஸ் கூறுகிறார்.

எந்தப்புராணத்தை நீங்கள் நம்பினாலும் சரியே, அதிலே ஏதாவது ஆபாசமற்றதாக, அறிவுக்குப் பொருத்தமானதாக, அன்புக்கு இருப்பிடமாக, அநாகரிக மற்றதாக இருக்கிறதா என்று அன்பர்களே எண்ணிப் பாருங்கள். இத்தகைய கதாநாயகரைக் களிமண்ணால் செய்து வைத்துக் கைதொழும் போக்கு சரியா என்பதை ஆற அமற யோசிக்கலாகாதா?

இவையும் இவை போன்றவையும் வெறும் ஆரிய மதச்சேறு! தமிழர்கள் இந்த உளைச் சேற்றிலே உழலுமட்டும், முன்னேற்றமேது, வாழ்வு ஏது? களிமண்ணுங் கையுமாக இருக்கும் தோழர்களே! கசடர் புனைந்துரைகளைக் கடவுட் கதையென்று நம்பி ஏமாளிகளாக இருக்குமட்டும், அறிவு உலகில், நம் நாட்டுக்குக் கோமாளிப் பட்டமே சூட்டப்படும். இவைகளை விட்டுவிடும் நாளே, சுயமரியாதை பிறக்கும் வேளையே, மக்களின் விடுதலை நாள்!

அடுத்த இதழில் முடியும்.... .

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# திருப்பூர், திருவண்ணாமலை, நாமக்கல்லில்
# ஜாதி எதிர்ப்புப் பரப்புரை




**திருப்பூர்:** பெரியார் பிறந்த நாளை முன்னிட்டு 11 இடங்களில் "ஜாதி நமக்கு அவமானம் மனிதம் நமது அடையாளம்" தெருமுனைக் கூட்டங்கள் அக்-05 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்றது.ஒரே நாளில் 11 இடங்களில் ஜாதி எதிர்ப்புப் பரப்புரையை திருப்பூர் மாவட்டக் கழகத் தோழர்கள் நடத்தினர்.பறை இசை முழக்கங்களோடு தொடங்கி, குழந்தைகள், மற்றும் பகுதி மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. பெரியாரின் கருத்துக்கள் அடங்கிய துண்டறிக்கை பொதுமக்களிடம் வழங்கப்பட்டது.

கழகப் பொருளாளர் சு.துரைசாமி தலைமை தாங்கினார். முகில் இராசு மாவட்டத் தலைவர் முன்னிலை வகித்தார். முதல் நிகழ்வாக பாரதி நகர் பகுதியில் பெரியார் படிப்பகத்தில் ஜாதி எதிர்ப்பு பரப்புரைக் கூட்டம் தொடங்கியது. வீரபாண்டி பிரிவு, கொளத்துப்பாளையம், கரை தோட்டம் (தென்னம்பாளையம்), மாஸ்கோ நகர், பெரியார் காலனி, அனுப்பர்பாளையம், அம்மா பாளையம், ஆத்துப்பாளையம் 15 வேலம்பாளையம் ஆகிய இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன.

(கழகப் பொருளாளர்) சு துரைசாமி, வீ.சிவகாமி (தலைவர் தமிழ்நாடு அறிவியல் மன்றம்), பரிமளராசன் (சமூகஊடகப் பொறுப்பாளர்), முகில் ராசு (மாவட்டத் தலைவர்), நீதிராசன்( மாவட்டச் செயலாளர்), ராமசாமி (தெற்கு பகுதிச் செயலாளர்), மாதவன் (மாநகரச் செயலாளர்), மாரிமுத்து (மாநகர துணைத் தலைவர்), முத்து (மாநகர அமைப்பாளர்), அய்யப்பன் (வடக்கு ஒன்றிய அமைப்பாளர்) மதன் ஆத்துப்பாளையம், கார்த்திக் 15 வேலம்பாளையம், மதிமுக சரவணன் ஆகியோர் கருத்துரையாற்றினார்கள்.

அம்மாபாளையம் பகுதியில் கழகக் கொடியினை மோகன் ஏற்றினார். ஆத்துப்பாளையம் பகுதியில் பெரியார் பிஞ்சு ஜெஸ்னா பெரியார் குறித்த கருத்துகளை தனது மழலை மொழியில் அனைவரையும் ஈர்க்கும் வகையில் எடுத்துரைத்தார். மதிய உணவு தமிழ்நாடு அறிவியல் மன்ற தலைவர் வீ. சிவகாமி இல்லத்தில் மாட்டுக்கறி பிரியாணி வழங்கப்பட்டது. கரை தோட்டம் பகுதியில் தனகோபால் தமிழ்நாடு அறிவியல் மன்றம், மாஸ்கோ நகர் பகுதியில் மாதவன், ஆத்துப்பாளையம் பகுதியில் மதன் குளிர்பானம் மற்றும் தேநீர் வழங்கி சென்ற இடமெல்லாம் வரவேற்பு கொடுத்தனர். நிறைவாக இனியன் நன்றி கூறினார்.

**திருவண்ணாமலை:** “எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்; இளைய தலைமுறைக்கு வேலை வேண்டும்” என்ற பிரச்சாரப் பயணம். அக்-15,16 ஆகிய இரண்டு நாட்கள் 8 இடங்களில் நடைபெற்றது. விழுப்புரம், திருவண்ணாமலை கழகத் தோழர்கள் ஒருங்கிணைந்து நடத்தினர்.

**முதல் நாள்:** அக்-15 அன்று புதன் கிழமை கரு. தமிழ்தாசன் தலைமையில் தானிப்பாடி பேருந்தம் நிறுத்தம் அருகிலும், தண்டராம்பட்டு செட்டிபட்டு கூட்டுச்சாலையிலும், குங்கிலியநத்தம் ஆகிய பகுதிகளில் ஜாதி எதிர்ப்புப் பிரச்சாரம் நடைபெற்றது. பிரச்சாரத்தின் நோக்கத்தினை விளக்கி விழுப்புரம் மாவட்டத் தலைவர் பூ.ஆ.இளையரசன், க.ராமர் கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் மற்றும் தலைமைக் குழு உறுப்பினர் ந. அய்யனார் ஆகியோர் உரையாற்றினார்கள்.




**இரண்டாம் நாள்:** 16.10.2025 வியாழன் கிழமை போளூர் பேருந்து நிறுத்தம் அருகிலும், கலசப்பாக்கம், துரிஞ்சாபுரம் மல்லவாடி கூட்டுச்சாலையிலும், திருவண்ணாமலை அறிவொலி பூங்கா அருகிலும் பிரச்சாரம் நடைபெற்றது.தமிழன் பாபு மதிய உணவு வள்ளலார் மடத்திலிருந்து வழங்கினார். இரண்டாம் நாள் பிரச்சார பயணத்தில் கள்ளக்குறிச்சி மாவட்டம் மக்கள் அதிகாரம் ராமலிங்கம் கலந்துகொண்டனர். கழகத் தோழர்கள் மு.நாகராஜ் கள்ளக்குறிச்சி மாவட்ட அமைப்பாளர், சி.சாமிதுரை ரிஷிவந்திய ஒன்றிய அமைப்பாளர், இரா.கார்மேகம் ரிஷிவந்திய ஒன்றியத் தலைவர், மா.குமார் தமிழ்நாடு மாணவர் கழக கள்ளக்குறிச்சி மாவட்ட அமைப்பாளர், கு.பாபா, கி.ஆனந்தன் ச.கு.பெரியார் வெங்கட், சிவப்பிரகாசம், வே.சிவராஜ், பா.விஜயாகுமார், நா.கலைமணி, வை.அகிலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**நாமக்கல்:** குமாரபாளையத்தில் 28.9.2025 மாலை கழகத்தின் சார்பில் “மனிதம் நமது அடையாளம்; ஜாதி நமக்கு அவமானம்!” என்ற தலைப்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் சாமிநாதன் தலைமை ஏற்க சி.மாதராசி வரவேற்புரை நிகழ்த்தினார்.

ஜாதி ஒழிப்புக்கான போராட்டங்களையும் சட்டங்களையும் பற்றி பெரியார் நடத்திய பல போராட்டங்களையும் இன்றைய தமிழ்நாடு முதலமைச்சரின் கவனத்திற்கும் எடுத்து வைக்கிற அளவிலே கேப்டன் அண்ணாதுரை, (தலைமைக் குழு உறுப்பினர்) உரை நிகழ்த்தினார். கோபி வேலுச்சாமி நகைச்சுவையாக பல்வேறு செய்திகளை பகுத்தறிவு சிந்தனைக்கு எடுத்து வைத்து சிறப்புரையாற்றினார்.

சிற்பி ராஜன் மந்திரம் அல்ல தந்திரமே அறிவியல் நிகழ்ச்சி நடந்தது. வசூல் பணியில் ஈடுபட்ட கழகத் தோழர்கள் நகரச்செயலாளர் ஸ்ரீ.வடிவேலு, மோகன், மாதேஸ்வரன், வளையல் செல்வம் ஆகியோருக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

தேவி மாதேஷ் அவர்களின் மகள் ரம்யா-பாரதி ராஜா இணையரின் குழந்தைக்கு புகழினி என்று சிற்பி ராசன் பெயர் சூட்டினார். செல்வராஜ் நன்றி கூறினார். அனைவருக்கும் நகரத் தலைவர் மீ.த தண்டபாணி இல்லத்தில் இரவு உணவு வழங்கப்பட்டது.




நிகழ்ச்சிக்கு முன்பாக கரூரில் 39 பேர் நடிகர் விஜய் கூட்டத்துக்கு சென்று நெரிசல் சிக்கி உயிரிழந்தவர்களுக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது. கழகத் தோழர்களும் அவரவர் தங்கள் குடும்பத்துடன் நிகழ்ச்சியில் பங்கெடுத்து கொண்டார்கள். மாவட்ட அமைப்பாளர் முத்துப்பாண்டி, மாவட்டச் செயலாளர் சரவணன், பள்ளிபாளையம், திருச்செங்கோடு தோழர்கள், காடச்சநல்லூர் செல்வகுமார் உள்ளிட்ட தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பெரியார் பிறந்த நாள் விழாக்கள்!



**கடலூர்:** மாவட்டக் கழகத்தின் சார்பாக 17.9.2025 காலை 9 மணி அளவில் கடலூரில் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. தோழர்கள் பெரியார் சிவா, அறிவழகன், அருணாச்சலம் வழக்கறிஞர், குப்பசாமி, பெரியார் பிஞ்சு திராவிட மகிழன் மற்றும் தோழமை இயக்கத் தோழர்கள் தி.ச திருமார்பன் வழக்கறிஞர் மாநில அமைப்பு செயலாளர் வி சி க ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தஞ்சாவூர்:** பேராவூரணி பெரியார் சிலைக்கு தலைமைக்குழு உறுப்பினர் திருவேங்கடம் தலைமையில் ஒன்றியச் செயலாளர் உதயகுமார், தமிழ்நாடு மாணவர் கழகப் பொறுப்பாளர் அறிவுச்செல்வன் ஆகியோர் முன்னிலையில் பேராவூரணி நகர அமைப்பாளர் தா.கலைச்செல்வன் மாலை அணிவித்தார்.

தி.க மாவட்டச் செயலாளர் மல்லிகை வை.சிதம்பரம், திமுக ஒன்றியச் செயலாளர் க.அன்பழகன், மதிமுக நகரச் செயலாளர் குமார், அதிமுக நகரச் செயலாளர் நீலகண்டன், காங்கிரஸ் நகரச் செயலாளர் பொன் நடராஜன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றியச் செயலாளர் வீரமணி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டக் குழு உறுப்பினர் ஆர்.எஸ் வேலுச்சாமி, தமிழ் வழி கல்வி இயக்கம் பழனிவேல், அறநெறி மக்கள் கட்சி பொதுச் செயலாளர் ஆயர் ஜேம்ஸ், தமிழக மக்கள் புரட்சிக் கழகம் கொள்கை பரப்புச் செயலாளர் ஆறு நீலகண்டன் ஆகியோர் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

திராவிடர் கழகப் பொதுக்குழு உறுப்பினர் இரா.நீலகண்டன், திராவிடர் விடுதலைக் கழக மாவட்ட அமைப்பாளர் திருவேங்கடம், நகரச் செயலாளர் கலைச்செல்வன் ஆகியோர் கொள்கை முழக்கமிட்டனர். அனைத்து கட்சியின் சார்பில் திரளான பொறுப்பாளர்களும் தோழர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டு தந்தை பெரியாரின் 147 பிறந்தநாள் விழாவை சிறப்பித்தனர்.



**முடச்சிக்காடு:** பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் உள்ள பெரியார் சிலைக்கு அறநெறி மக்கள் கட்சி பொதுச் செயலாளர் ஆயர் ஜேம்ஸ், மரக்காவலசை பெரியசாமி இல்லத்தில் உள்ள பெரியார் சிலைக்கு மாவட்ட அமைப்பாளர் திருவேங்கடம் மாலை அணிவித்து சிறப்பு செய்தனர்.

**ஈரோடு வடக்கு:** கோபி ஒன்றியத்தில் கொளப்பலூர், சிறுவலூர் ,கோபி பேருந்து நிலையம், கச்சேரி மேடு, ல.கள்ளிப்பட்டி கல்லூரி பிரிவு,கோட்டுபுள்ளாம்பாளையம் அயலூர் சமத்துவபுரம், கோபி மார்கெட்திடல் ஆகிய பகுதிகளில் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்ட தந்தை பெரியாரின் படத்திற்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி சமூக நீதி நாள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். நிகழ்வில் கழகத்தின் கழக வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன் தலைமையில் தோழர்கள் நிவாஸ், அருளானந்தம், ஜெகநாதன், ரகுநாதன், மூர்த்தி, ரங்கசாமி, கிருஷ்ணமூர்த்தி, தங்கம் ,ஆசைத்தம்பி, பழனிச்சாமி, காமராஜ், முருகேசன், மணிமொழி, வழக்குரைஞர் ஜெகதீஸ்வரன், மோகன், தயாநிதி, பரசுராமன், துரை, அறிவுக்கனல் உள்ளிட்ட கழகத் தோழர்களும், திமுக கொளப்பலூர் பேரூராட்சித் தலைவர் அன்பரசு ஆறுமுகம், சரண்யா, பேரூர்கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மதியம் தோழர்களுக்கு கோபி நகர கழகத்தின் சார்பில் உணவு வழங்கப்பட்டது.



**சத்தி:** சத்தி ஒன்றியத்தின் சார்பில் புது ரோடு, அண்ணா நகர், சத்தி எஸ்.ஆர்.டி கார்னர், சத்தியமங்கலம் பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் அலங்கரிக்கப்பட்டிருந்த பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். சிதம்பரம் முத்து, தமிழரசன், உள்ளிட்ட தோழர்களும் ஆதித்தமிழர் பேரவை, தமிழ் புலிகள் கட்சி, எஸ்டிபிஐ கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட அமைப்பின் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

**நம்பியூர்:** நம்பியூர் ஒன்றியம் சார்பாக புலவன் சிறை, கோசனம் ஆகிய பகுதிகளில் அலங்கரிக்கப்பட்ட பெரியாரின் படத்திற்கு மாலை அணிவித்தும், நம்பியூரில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு மாவட்டச் செயலாளர் செல்வகுமார் தலைமையில் தோழர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நம்பியூர் ஒன்றிய ரமேஷ் மயில்சாமி நடராஜன் உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**டி.என்.பாளையம் ஒன்றியம்:** ஒன்றியத்தின் சார்பில் காந்திநகர், காசிபாளையம் ஆகிய பகுதியில் அலங்கரிக்கப்பட்டிருந்த பெரியாரின் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் தலைமை கழகப் பேச்சாளர் வேலுச்சாமி, ஒன்றியப் பொறுப்பாளர் கருப்பணன், சின்னத்தம்பி, பழனிச்சாமி, அசோக், சண்முகம், ஹரி வர்சன் மற்றும் திமுக பொறுப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சிறப்பு செய்தனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : October 24 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran